[1981 பிப்ரவரி 9

வத்தலக்குண்டு பகுதியில் வெடி விபத்து.

*வினா எண் 244—திரு. என். எஸ். வி. சித்தன், திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கடந்த (1980) ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்தில் வத்தலக்குண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் மரணமடைந்தவர், காயமடைந்தவர் எத்தனை பேர்?

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்தம் குடும்பங் களுக்கும் அரசு அளித்த உதவித் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (அ) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கடைசி வாரத்தில் வத்தலக்குண்டில் ஏற்பட்ட வெடி விபத்தில் மரணமடைந்தவர் 42 பேர். காயமடைந்தவர்கள் 60 பேர்.

(ஆ) பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்தம் குடும்பங் களுக்கும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2,11,000 நிவாரணமாக வழங்கப்பட்டது. இது தவிர, பிரதமரின் தேசீய நிவாரண நிதியிலிருந்து ரூ. 66,000 நிவாரணமாக வழங்கப் பட்டது. அது பற்றிய விவர அறிக்கை ** ஒன்றும் அவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, வெடி விபத்து சம்பந்தப்பட்ட இடத்திலே எவ்வளவு மதிப்புள்ள வெடிப் பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன ? பதுக்கி வைத் திருந்த வியாபாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அவர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்குமன்றத் திலே வழக்கு இருக்கிற காரணத்தால் அதுபற்றிய முழு விவ ரங்கள் என்னிடத்தில் இல்லை.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, வத்தலக்குண்டில் ஏற்பட்ட இந்த பயங்கரமான வெடி விபத்து ஏன் ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்து அதற் குரிய சரியான விவரமான அறிக்கை இங்கே வைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**130–132-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற் றுள்ளது.

1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஏன் ஏற்பட்டது என்பதைக் கண்டறிந்துதான் அந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றது.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : தலைவரவர்களே, இந்த விபத்தினால் எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்கின்ற விவரம் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, சேதம் எவ்வளவு என்ற புள்ளிவிவரத்தைப் பார்ப்பதை விட எவ்வளவு பேர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு அரசு அதற்கு ஆவன செய்திருக்கின்றது. மேலும் விபத்து நடந்த உடனே அந்த இடத்திற்கு அமைச்சர்கள் சென்று பார்த்திருக்கிறார்கள் என்பதும் மருத்துவமனைக்கும் சென்று பார்த்திருக்கிறார்கள் என்பதும் உங்களுக்கெல்லாம் தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, அரசைப் பொறுத்தவரையிலே இவ்வாறு விபத்திலே இறந்துவிட்டவர்களின் குடும்பத்திற்கு கொடுக்கின்ற நஷ்ட ஈடு அக்குடும்பத்திலே நான்குபேர் இறந்திருந்தாலும் இறந்துவிட்ட ஒருவரை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு அக்குடும்பத்திற்கு உதவித் தொகை கொடுக்கப்படுகின்றது. ஆகவே நான்கு பேர் இறந்திருந்தால் அந்த நான்கு பேரையும் கணக்கில் எடுத்துக்கொண்டு அதற்குத் தகுந்தவாறு அக்குடும்பத்திற்கு உதவி செய்ய அரசு முன்வருமா ? இப்போது 5 ஆயிரம், ரூ. 2 ஆயிரம் என்றெல்லாம் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டாலும் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இறந்திருந்தாலும் அக்குடும்பத்திற்கு மொத்தமாக ஒரு ஆள் இறந்துவிட்ட கணக்கின் அடிப்படையிலேதான் கொடுக்கப்படுகின்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, விபத்து நடந்து அதனால் இறந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாய் தான் கொடுக்கவேண்டும் என்று அரசாணையில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் நாங்கள் 5 ஆயிரம், 10 ஆயிரம் என்றெல்லாம் கொடுத்திருக்கிறோம். மேலும் நான் அவை முன் வைத்திருக்கின்ற அறிக்கையினை முழுவதும் படித்தால் கேள்வி கேட்க வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு எல்லா விவரங்களும் அதிலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு வெடி விபத்து ஏற்பட்டதற்குப் பிறகும் கூட சிலர் வெடி மருந்துகளை லைசன்சு இல்லாமல்

விற்றுக்கொண்டிருக்கிறார்களே, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, லைசன்சு இல்லாமல் வெடி மருந்து வைத்திருப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. ஆனால் அப்படி எங்கேயாவது யாராவது வைத்திருக்கின்றார்கள் என்ற தகவலைக் கொடுத்தால் அவர்கள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, சில வியாபாரிகள் ஒரு சிலவெடிமருந்துக்களுக்குரிய லைசன்ஸை வாங்கி வைத்துக்கொண்டு பல வெடி மருந்துகளை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகவும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நேர்கின்றன. மேலும் நடந்த இச்சம்பவத்தில் 46 பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மொத்தமாக 2 இலட்சத்து 11 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது மிகக் குறைந்த அளவு. ஆகவே மீண்டும் ஒரு குறிப்பிட்ட தொகையை அக்குடும்பத்தினருக்கு கொடுக்க இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்படவேண்டும் என்று அரசாணையில் இருக்கின்றது. ஆனால் நாங்கள் 5,000, 10,000 என்றெல்லாம் கொடுத்திருக்கிறோம். மேலும் மாநில அரசு கொடுத்தது 5,000 என்றால் மத்திய அரசும் ஆயிரம் கொடுத்திருக்கின்றது. ஆகவே சிலருக்கு 6,000 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, இறந்துவிட்டவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு படிப்பதற்கும், மற்றும் பல காரியங்களுக்கும் உதவி செய்யப்படுகின்றது. ஆகவே நான் அவையிலே வைத்திருக்கின்ற விவரமான அறிக்கையைப் படித்தாலே கேள்வி கேட்பதற்கு இடமில்லாமல் எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்ளலாம்.

திரு. பெ சு திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்த வெடி விபத்துக்குப் பிறகு விவசாய காரியங்களுக்குப் பயன்படுகின்ற தோட்டாக்களின் விலையை எல்லாம் வியாபாரிகள் ஏற்றிவிட்டார்கள், ஏன் இவ்வாறு விலையை ஏற்றிவிட்டீர்கள் என்று கேட்டால் அரசாங்கம் அனுமதிப்பதில்லை என்று சொல்லி ஏராளமான பணத்தை வசூலிக்கிறார்கள், ஆகவே அதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1981 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, அரசுக்கு அப்படிப்பட்ட தகவல் வரவில்லை. யாராவது அப்படி விலையை ஏற்றி விற்கிறார்கள் என்று அவர்களுடைய பெயரைக் கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண். 245—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் நிதி நெருக்கடி நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதைப்போக்க அரசிடம் மானியம் ஏதும் கோரப்பட்டுள்ளதா ?

(இ) மானியம் கொடுக்கும் உத்தேசம் ஏதும் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) & (ஆ) ஆம்.

(இ) கூட்டுறவுப் பதிவாளர் சங்கத்திடமிருந்து திட்டவட்டமான கோரிக்கைகள் கேட்டுள்ளார். வரப்பெற்றதும் அவை பரிசீலிக்கப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[முற்பகல்—9-20]

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலேதான் அதிகமான அளவில் புகையிலை விவசாயத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியிலே இருக்கும் கூட்டுறவுத் துறை சங்கத்திற்கு நிதி உதவி செய்யாததின் காரணமாக அவர்கள் தனியார்களிடத்திலே சென்று அதிகமான அளவு வட்டி வீதத்தில் பணம் பெற்று விவசாயம் செய்தும், நிர்ப்பந்தத்தின் காரணமாக உற்பத்தி செய்த புகையிலையை பாதி விலைக்கு விற்று கடனை அடைக்கும்போதும் மறுபடியும் கடனாளிகளாகவே இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அதை அமைச்சர் அவர்கள் நன்கு பரிசீலித்து அவர்களின் கஷ்டத்தைப் போக்குகிற வகையில்.....

(மணியடிக்கப்பெற்றது.)